# மனோன்மணீயம் உணர்த்தும் மொழிப்பற்று

**ரெ. லூ. சைமன்**
முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழாய்வுத்துறை
தூய வளனார் தன்னாட்சிக் கல்லூரி
திருச்சிராப்பள்ளி

## முகவுரை

''நாட்டுப் பற்றும் மொழிப் பற்றும் அற்றவர்கள் வாழ்ந்து செழித்ததாக வரலாற்றுக் குறிப்பே இல்லை'' என்கிறார் தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்கள். கனவு வானத்தில் பறந்து கவிதைகளை வரைந்தாலும் கவிஞனின் பார்வை பூமியிலேயே இருக்க வேண்டும். அதற்கு ஏற்ப தமிழ்ச் சமூகத்தைப் பற்றிச் சிந்தித்து இருள் மண்டிக் கிடக்கும் தமிழ் நெஞ்சங்களில் மொழிப்பற்றையும் அறிவு வெளிச்சத்தையும் பாய்ச்சியுள்ளார் சுந்தரனார். முதன் முதலில் தமிழ் மொழியின் சிறப்பைச் சுந்தரனார் மட்டுமே கடவுள் வாழ்த்தாகப் பாடியுள்ளார். தமிழ்மொழி, தமிழ் உணர்வு இவற்றின் சமுதாயப் பிரதிபலிப்பாக விளங்குகிறது தமிழ்த் தெய்வ வணக்கம். இன்று வளர்ந்து வரும் நாடகத்திற்கு எல்லாம் ஒரு முன்னோடி சுந்தரனார் ஆவார்.

**எம்மொழியும் ஈடாகா திம்மொழிக் கென்றுலகம்**
**செம்மையுறக் கண்டு தெளிந்திடவே - நம்மினிய**
**செந்தமிழின் தெய்வச் சிறப்பெல்லாம் யாருரைத்தார்**
**சுந்தரனைப் போலத் தொகுத்து.**[1]

என்று வாழ்த்துகின்றார் கவிமணி தேசிக விநாயகம்.

## வடமொழி ஆங்கில மோகம்

பேராசிரியர் சுந்தரனார் 1855-1897 காலத்திற்கு முன்பும் அவர் காலத்திலும் வடமொழிப் பற்றும் தாகமும் கற்றோரிடையே வேகமாக ஆட்கொண்டிருந்தது. அதற்கும் மேலே ஆங்கிலமொழியே ஆட்சிமொழியாகச் செங்கோலோச்சிக் கொண்டிருந்தது. தமிழ் மொழி மீது பற்றுடையோர் சிலர் வாழ்ந்து கொண்டிருந்தாலும் அவர்கள் பேச்சு சிறப்புபெறவில்லை; அவர்கள் எழுத்தும் மதிக்கப்படவில்லை.

தமிழர் வாழ்வில் தமிழ்த் தாயின் வாழ்வு ஒரு மூலையில் முடங்கி நலங்குன்றியமைந்திருந்தது. பெற்ற பிள்ளைகளே தாயைப் பேணாத சோகநிலையே முற்றிலும் பரவியிருந்தது. வடமொழியிலே எழுதுவதே பெருமை; ஆங்கிலத்திலே பேசுவதே சிறப்பு என்ற இழிநிலைகளையே தமிழர் கண்மூடிப் பின்பற்றி வாழ்கின்றனர். இந்த நிலையிலே தான் பேராசிரியர் சுந்தரனார் மனோன்மணீய நாடகத்தில் கடவுள் வாழ்த்தாகத் தமிழ்த் தெய்வ வணக்கம் பாடுகிறார்.

மனோன்மணீயம் நாடகமாகப் படைக்கப்பட்டிருந்தாலும், அதனுள் காப்பியக் கூறுகள் அமைந்துள்ளன. எனவே, கற்றவரிடையே நல்ல வரவேற்பு இந்நூலுக்கு என்றும் உண்டு. ஒரு காப்பியம் எவ்வாறு அமைய வேண்டும் என்பதைத் தண்டியலங்காரம் என்ற அணியிலக்கண நூல் வரையறுத்துக் கூறியுள்ளது.

**பெருங்காப்பியநிலை பேசுங் காலை**
**வாழ்த்து வணக்கம் வருபொரு ளிவற்றினான்**
**... ... ...**
**கற்றோர் புனையும் பெற்றிய தென்ப**[2]

என்பது காப்பிய இலக்கணமாகும்.

தமிழில் நூல் செய்வார் தாம் வழிபடு கடவுளை வணங்குதல், வாழ்த்துதல் நெடுங்காலமாகப் பின்பற்றி வருகின்ற முறைமையும், நூலுக்கு ஏற்புடைய இறையை தொழுதலும் உண்டு. பேராசிரியர் சுந்தரனார் இருமுறையையும் தழுவி முதன் முறையாகத் தமிழ்த் தெய்வ வணக்கம் பாடுகின்றார். தமிழ் மொழியை நாம்

பொதுவாகத் தாயென போற்றுகின்றோம். ஆனால், பேராசிரியர் நம் மொழியைத் தெய்வமாகவே கொள்கின்றார். தமிழ்த் தெய்வத்தை வணங்குவதில், வாழ்த்துவதில் எல்லையில்லா இன்பம் பெறுகின்றார். "தமிழ்வேறு; தெய்வம்வேறு" என்ற கோட்பாடு சுந்தரனார்க்கு இல்லை. இதனைக் காணுங்கால் பேராசிரியர் நம்மைவிடத் தமிழ்த்தாயிடம் எவ்வளவு பற்றுக் கொண்டுள்ளார் என்பது தெளிவாக விளங்குகின்றது.

ஆங்கிலம் கற்ற பேரறிஞரான பேராசிரியர் சுந்தரனார் அவர்கள், கற்ற கல்வியினால் பெற்ற பயன் சிறப்புற அமையத் தமிழ்த்தொண்டில் ஈடுபடுகிறார். பேராசிரியர் சுந்தரனார் உருவகம் வாயிலாக உணர்த்திய உண்மை உலகம் ஒப்ப முடிந்ததாக அமைகிறது. தமிழ் மொழி பற்றி,

**வானமளந்த தனைத்தும் அளந்திடும்**
**வண்மொழி வாழியவே**
**ஏழ்கடல் வைப்பினும் தன்மணம் வீசி**
**இசைகொண்டு வாழியவே**[3]

என்று கூறும் பாரதியின் மொழிகளும் "எத்திசையும் புகழ் மணக்க இருந்தபெருந் தமிழணங்கே" என்ற சுந்தரனார் வரிகளும் ஒத்துச் செல்வதைக் காண்கிறோம்.

தமிழின் தனித்தன்மையைக் கண்டு தமிழை ஒரு மொழியாக மட்டும் கூறாமல் தாயாக மட்டும் உருவகப்படுத்தாமல், பரம்பொருளோடு ஒப்பிட்டு மகிழ்கின்றார் பேராசிரியர்

**பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துக் துடைக்கினும் ஓர்**
**எல்லையறு பரம்பொருள் முன் இருந்தபடியே இருப்பதுபோல்**

தமிழ்த் தாயும் இருக்கின்றாள் என எண்ணிப் பூரிப்படைவதோடு. பேராசிரியர் தமிழின் பெருமையுணர்ந்து தன்னை மறந்து வாழ்த்துகின்றார் பேராசிரியர்.

### தென்மொழியே கலைமகள் வலக்கண்

வடமொழி தென்மொழி என்ற இரண்டனுள் தமிழ் பலவகையிலும் உயர்ந்தது. திசையில் வடக்கு தெற்கு போல வடமொழி தென்மொழி தம்முள் ஒத்தன என்பதில் ஒத்தக் கருத்துடையவர் பேராசிரியர். வடமொழியாளர் சிலர் தமிழைத் தாழ்ந்தது என்றும் வடமொழி உயர்ந்தது எனப் பேசி வந்தனர். வடமொழியாளர் வலக்கண் போன்றது வடமொழி என்றும் இடக்கண் போன்றது தென்மொழி என்றும் கூறிவந்தனர்.

### கிழக்கு மேற்குத் திசை தெரியாதவர்

இதனைக் கேள்வியுற்ற சுந்தரனார் தகுந்த முறையில் காரண காரியங்காட்டித் தமிழ் மொழியே வலக்கண் என்று நிறுவுகின்றார். கலைமகள் மரபுப்படி கீழ்த்திசை நோக்கியே வீற்றிருக்கின்றாள். கீழ்த்திசை நோக்கி இருக்கும் கலைமகளின் வலக்கண் தென்பக்கமே இருக்கும். இடக்கண் வலப்பக்கமே இருக்கும். வலப்பக்கம் தென்திசையாக வரும்பொழுது அத்திசை வழங்கும் தென்மொழி வலக்கண்ணாக அமையுமேயன்றி இடப்பக்கமாக அமையாது என்பதை மெய்ப்பித்துக் காட்டுகின்றார்.

கிழக்கு மேற்கு திசையறியாதவர்கள் தாம் வடமொழி வலக்கண் என்று கூறுவர். மொழிகளுக்கு இடையே ஏற்றத்தாழ்வு கற்பிக்கும் அவர்களின் அறியாமையைப் பலப்படுத்தித் தம் நுண்ணறிவால் விளக்கம் தருகின்றார் பேராசிரியர்.

**தாய்மொழி பழித்துப் பேசுந்**
**தறுதலை எவனுந் தோன்றின**
**பாய்புலி யாவர் எங்கள்**
**பைந்தமிழ் மறவர் என்று**
**கூய்வரும் மொழியைக் கேட்டுக்**
**குளிர்ந்ததென் னுள்ள மெல்லாம்**
**நாய்களின் வாலைச் சற்று**
**நறுக்கித்தான் வைக்க வேண்டும்**

(தாய்மொழி காப்போம், ப.66)[4]

என்கிறார் கவிஞர் முடியரசன்.

வடமொழி இலக்கியங்களைவிடத் தமிழ் இலக்கியங்கள் சிறந்தவையென எடுத்தியம்புகின்றார் பேராசிரியர். "பத்துப்பாட்டாதி மனம் பற்றினார் பற்றுவரோ எத்துணையும் பொருட்கிசையும் இலக்கணமில் கற்பனை" நூல்களாகிய வடமொழி நூலை என எடுத்தோதுத் தமிழர் விரும்பமாட்டார் என முடிவு செய்கிறார்.

திருக்குறளும் மனுநீதியும்:

"நாதமேது பேதமேது நாற்குலங்கள் ஏதடா" என்ற சிவவாக்கியாரின் வரிகளுக்கு ஏற்ப சாதி, மதம் இல்லா ஒடுக்குதல்கள் இல்லாத சமத்துவ வாழ்க்கையைச் சுந்தரனார் தமிழ்த் தெய்வ வணக்கத்தில் கூறுகிறார்.

பேராசிரியர் வள்ளுவன் செய் திருக்குறளை மறவற நன்குணர்ந்தவர்கள் ஒரு குலத்திற்கு ஒரு நீதிபேசும் மனுதருமசாத்திரங்களை ஏற்கமாட்டார். மக்கட் பிறப்பில் அனைவரும் சமம் என்பது தமிழ் அறம் மனு தரும் சாதிவேறுபாடுகளை ஏற்றுக் கொள்வது.

திருவாசகத்தில் உருகிநிற்போர் தாடி, சடை, என்று உருவேற்று கண்மூடிக் கதறும் பொருளற்ற வாசகங்கள் ஒருபோதும் ஏற்கமாட்டார்கள் என்று கூறுகிறார். பேராசிரியர் வடமொழிக்கும், தென்மொழிக்கும் இலக்கியத்திலும் கருத்திலும் உள்ள ஏற்றத் தாழ்வுகளை எடுத்துக்காட்டுவதில் பேராசிரியரின் ஒப்பற்ற தமிழ்ப்பற்றை நன்கு கண்டுகொள்கின்றோம்.

> **தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்**
> **மூவர் தமிழும் முனிமொழியும் - கோவை**
> **திருவா சகமும் திருமூலர் சொல்லும்**
> **ஒருவா சகமென் றுணர்**[5]

என்ற பாடலுக்கு ஏற்ப வள்ளுவக் குறளமுதை வழுவறப் பயின்றவர்கள், ஒவ்வொரு குலத்திற்கும் வருணத்திற்கேற்றவாறு ஒவ்வாத பல நீதிகளையுரைக்கும் மனு முதலிய நூல்களை நினைவு கூர்கிறார். எல்லோருக்கும் பொது நீதி புகலும் குறள் அறத்தின்முன் வேறெந்த அறநூலும் நிற்பதற்கில்லையென்பதே ஆசிரியர் கருத்து.

> **ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்கள் உயிர்களைப் பற்றிக் கொண்டு உயிர்களின் அறிவை விளங்கச் செய்யாமல் தடுத்து நிற்பவை. இவை நீங்க, உயிர்கள் ஞானம் பெற்று வீடு பேறடையும்.**

என்பது சைவ சமயக்கருத்து.

> **சைவத்தின் ஒழுக்கங் காட்டி சமயங்கள் கடந்து நிற்கும்**
> **தெய்வத்தின் விருப்பங் காட்டித் தெளியாரும் ஒப்பவேண்டி**
> **வையத்தின் வழக்கங் காட்டி வகுத்தநல் லுரையைக் கண்டேம்**
> **கையொத்துத் தொழுது செல்வேம் கதிர்மணி விளக்கம் வாழ்க**[6]

என்ற கதிர்மணிப் பாடல் தரும் சைவ விளக்கத்தை ஒப்புநோக்கத்தக்கது.

ஆதலின் மும்மலங்களையும் எளிதே நீக்கவல்லது திருவாசகம். திருவாசகத்திற்கு உருகாதவர்கள் ஒரு வாசகத்திற்கும் உருகப்போவதில்லை. திருவாசகத் தேனருந்தியோர் புறவேடந்தாங்கி வடமொழி வேதத்தை உருவேற்றிக் கண் மூடிக் கதறமாட்டார்கள் என்று கூறும்போது, ஆசிரியர் சுந்தரனார் திருவாசகப் பெருமையைத் தமிழ்ப் பெருமையாகச் சுட்டிக் காட்டுகின்றார்.

தமிழ்மொழி தமிழகத்தே நின்று தரணியெல்லாம் புகழ்மணக்கச் செய்கின்றது. தமிழ் ஆளுமைக்குட்பட்டதே வையம் என்பது பேராசிரியர் கருத்தாகும். இதனையே பாரதிதாசன்,

> **தாயெழிற்றமிழை, என்றன் தமிழரின் கவிதைதன்னை**
> **ஆயிரம் மொழியில் காண இப்புவி அவாவிற்றென்ற**
> **தோயுறும் மதுவினாறு தொடர்ந்தென்றன் செவியில் வந்து**
> **பாயும் நாள் எந்த நாளோ யாரிதைப் பகர்வாரிங்கே**[7]

என்று கேட்கின்றார்.

வடமொழியையும் தென்மொழியையும் சரிசமானமாகவே பார்த்துப் பாராட்டி வந்த கவிஞர்கள் யாரும் பேராசிரியர் சுந்தரனாரைப் போன்று சீர்தூக்கிப் பார்த்து ஒரு முடிவிற்கு வரவில்லை. வடமொழியை விடச் சிறந்தது உயர்ந்தது தமிழ் என்று தமிழ்த் தெய்வ வணக்கத்தில் கூறிய பெருமை பேராசிரியர் சுந்தரனாரையே சாரும்.

**வடமொழி மந்திரம்**

பொருள் புரியாமல் வடமொழி மந்திரத்தைக் கோயில்களில் ஓதுவதைச் சுந்தரனார் "வார்த்தை கத்தும் வாதியர் மன்றனைத்தும் வறிய" எனச் சிவகாமி சொற்களைப் பின்பற்றியே பாரதி பிற்காலத்தில் வேத முணராது வேறு மொழிகளை உச்சரிப்பவர்களை மழைக்காலத்து மடைத் தவளைகளின் இரைச்சலுக்கு ஒப்பிடுகின்றார் "உருவேற்றிக் கண் மூடிக் கதறுவரோ" என்ற சொற்றொடர் இத்தகைய வேகத்தைத் தந்துள்ளது

**மொழிச்சிந்தனை**

பேராசிரியர் உலகிலேயே தலைசிறந்த இடமாகத் தமிழகத்தைக் குறித்து அதில் பிறந்து தமிழ்மொழி உலகிற்கெல்லாம் மணமூட்டி இனிமை தருகின்ற ஒரு பொருளாக அமைந்திருக்கின்றது என்று கூறும்பொழுது அவர் தமிழிற்கு எவ்வளவு ஏற்றங் கொடுத்துப் போற்றுகின்றார் என்பதையும் அறியமுடிகிறது.

**மொழிப்பற்று - தமிழ் மொழிக்கு ஜே, ஜே!:**

நாட்டுப்பற்றுடன் மொழிப்பற்றும் பிணைந்தே சுந்தரனாரின் உள்ளத்தில் இருப்பதை வீரர்களிடம் நாட்டுப்பற்று பற்றி உரையாற்றுகையில் காணலாம்.

> **விந்தம் அடக்கினோன் தந்தநற் றமிழ்மொழி**
> **தற்சுதந் தரமறும் அற்பர்வாய்ப் படுமோ?**

என்று இயம்ப, படையினர், "தமிழ் மொழிக்கு ஜே, ஜே!" எனத் தாய்மொழியை வாழ்த்துகின்றனர்.

> **பழையோர் பெருமையும் கிழமையும் கீர்த்தியும்**
> **மன்னிய அன்பின்நும் அன்னையர் பாடி**
> **நித்திரை வரும்வகை ஒத்தறுத்து உமது**
> **தொட்டில் தாலாட்ட அவ் இட்டமாம் முன்னோர்**
> **தீரமும் செய்கையும் வீரமும் பரிவும்**
> **எண்ணி இருகணும் கண்ணீர் நிறையக்**
> **கண் துயிலாது நீர் கனிவுடன் கேட்ட**
> **வண்தமிழ் மொழியால் மறித்துஇக் காலம்**
> **ஆற்றலம் ஆண்மையும் உரிமையும் ஒருங்கே**
> **தோற்றனம் எனச்சொலத் துணிபவர் யாவர்?**

என்று சீவகன் தமிழ்மொழியின் சிறப்பைப் படைவீரர்களிடம் கூறி வீரவுரை ஆற்றுகிறான்.

**தாய்மொழி தமிழின் ஒரு பெருமை**

தமிழினாட்சி செங்கோலோச்சினால் தமிழின் சிறப்பு தரணியெங்கும் ஓங்கும் என்பதில் ஐயமே இருக்க முடியாது. பாரதிதாசனும் அக்கருத்தினை ஒட்டியே

> **மணக்கவரும் தென்றலிலே குளிரா இல்லை**
> **தோப்பில் நிழலா இல்லை**
> **தணப்பரிதாம் துன்பமிது! தமிழகத்தின் தமிழ்த்**
> **தெருவில் தமிழ்தான் இல்லை**[8]

என்று மனம் நொந்து பாடுகிறார்.

**தொகுப்புரை**

பறவைகள் தம் குஞ்சுகளைச் சிறிது காலமே கண்ணுங்கருத்துமாய்க் காத்து வருகின்றன. விலங்குகள் தம் கன்றுகளை, குட்டிகளைச் சிறிது நாள்களே நாவால்

நக்கிப் பாலூட்டிக் காத்து நிற்கின்றன. பெற்ற தாய் கூடச் சில ஆண்டுகள் பிள்ளைகளைக் கவனித்து வருகின்றாள். ஆனால் தமிழ்த்தாய் தம் மக்களைக் கடைசி வரை பேணி ஆதரித்துக் காத்துவருகிறாள். எவராலும் மாற்ற முடியாத பெருமைக்குரியவள் தமிழன்னை ஒருத்தியே ஆவார். நாம் உண்ணும் உணவை மாற்றலாம்; நாம் உடுத்தும் உடையை மாற்றலாம்; பின்பற்றிய கட்சி அரசியலை மாற்றலாம், விரும்பிய போற்றிய தலைவரை மாற்றலாம், பிறந்த ஊரை மாற்றலாம், பெற்றோர் இட்ட பெயரை மாற்றலாம், மதம் மாறலாம், கொண்ட மார்க்கம் வேறுபடலாம், உடன் பிறந்தாரைக் கூட மறந்து போகலாம், உற்ற நண்பர்களைப் பிரிந்து போகலாம், காதலித்து மணந்து கொண்ட அன்பு மனைவியைக் கூட மறக்கவும், விலக்கவும் சோதனை வரலாம். ஆனால் மாற்றவே முடியாதது தாய்மொழி ஒன்றே. பிறந்த நாள் தொடங்கி இறக்கும் நாள் வரை உயிருடன் கலந்து உடனுறைவது தாய்மொழி ஒன்றே.

தமிழறிஞர் வையாபுரியார் ''சுந்தரனாரின் தமிழ்த் தெய்வ வாழ்த்துதான் நமது மொழியை ஒரு தெய்வமாக்கி ஒரு புதுச் சமயத்தை முதன் முதலில் வகுத்துத் தந்தது. புதிதாய்த் தோன்றிய வழிபாட்டிலே தமிழ் மக்கள் ஒருமுகமாய் உழைத்து ஈடுபடுவாராயின் தங்களிடையேயுள்ள வேறுபாடுகளை கொடுமையெல்லாம் ஒழிந்து ஒற்றுமையோடு வாழ்வர் என்பது திண்ணம்'' என்று குறிப்பிடுகின்றார். தனித்தமிழ் இயக்கத்தின் முன்னோடி சுந்தரனார்:

**ஆரியம் போல் உலக வழக்கு அழிந்து ஒழிந்து சிதையா உன்**
**சீரிளமைத் திறம் வியந்து, செயல் மறந்து வாழ்த்துதுமே**

என்று குறிப்பதன் மூலம், தனித்தமிழ் இயக்கத்திற்குக் கால்கோள் இட்டவர் பேராசிரியர் சுந்தரனார் என்பதை இக்கட்டுரை வாயிலாக அறியலாம்.

**சான்றெண் விளக்கம்**


1. கழக வெளியீடு - கவிமணி கவிதைகள் ப. 106
2. கழக வெளியீடு - தண்டியலங்காரம் ப 24
3. கழக வெளியீடு - பாரதியார் கவிதைகள் ப 48 (தேசிய கவிதைகள்)
4. வசந்தா - முடியரசன் கவிதைகள் ப 36
5. வையாபுரியார் எஸ் - நற்றிணை ப 571
6. மாணிக்கம் அ - மனோன்மணீயம் ப 49
7. கழக வெளீயிடு - பாரதிதாசன் கவிதைகள் ப 128
8. வேங்கடசாமி நாட்டார் ந.மு - ஆய்வுக் கட்டுரைகள் ப 87
9. கழக வெளியீடு - பாரதிதாசன் கவிதைகள் ப 19


**துணைநூற் பட்டியல்**


1. இயேசுதாஸ், த., மனோன்மணீயம், சி.எஸ்.ஐ. அச்சகம், மார்த்தாண்டம், கன்னியாகுமரி, முதற்பதிப்பு 1990
2. தூய வளனார் கல்லூரி வெளியீடு, மனோன்மணீயம், தமிழ்த்துறை வெளியீடு, திருச்சி-2, முதற்பதிப்பு 2005.